<u>**சார்பு நீதிமன்றம், அவிநாசி**</u>

<u>**OS – 03/2022**</u>

நாள் 19.01.2026

DW2 – சென்னியப்பன்

த/பெ – லேட்.மலையப்ப கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of January 2026)**

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. தாவா சொத்தின் பழைய சர்வே எண்.251 ஆகும். அதில் உள்ள மொத்த பரப்பான 7.84 ஏக்கரில் 05.06.1958–ம் தேதியிட்ட பாக பத்திரத்தின் படி பொதுவில் 1/4 பங்கு படி 1.96 ஏக்கர் பொன்னுச்சாமி, முத்துச்சாமி ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதில் முத்துச்சாமியின் பங்கை அவருடைய சகோதரர் பொன்னுச்சாமிக்கே எழுதி கொடுத்து விட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண்.251–ல் இருந்து 7.84 ஏக்கர் சொத்துக்கள் உட்பிரிவுகள் ஆகி விட்டது என்றால் சரிதான். எல்லோருடைய சம்மதித்தின் பேரில் தான் சொத்துக்கள் உட்பிரிவுகள் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உட்பிரிவுகளின் படி வாதியின் தாத்தா பொன்னுச்சாமி கவுண்டருக்கு சர்வே எண்.33/11 காலையில் 1.90 ஏக்கர் பூமியும், சர்வே எண்.33/10–ல் 8 சென்ட்டில் பொதுவில் 1/8 பங்காக 1 சென்ட்டும் பாத்தியம் என்றால் சரிதான். பொது தடத்திற்காக வேண்டி 5 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் தடமே கிடையாது. சர்வே எண்.33/11 காலையில் இருந்த 1.90 ஏக்கர் பூமியில் 1.50 ஏக்கரை வா.சா.ஆ.3–ன் படி பொன்னுச்சாமி கவுண்டர் மாரப்ப கவுண்டர் மகன் அப்புசாமி என்பவருக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் கொடுத்தது போக பொன்னுச்சாமி

கவுண்டருக்கு இன்னும் எனக்கு பங்கு பாத்தியம் உள்ளது என்று கண்டு தான் கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது, அந்த ஆவணத்தை நான் பார்க்கவில்லை. மேற்படி வீதம் 1.50 ஏக்கர் கிரையம் கொடுத்தது போக மீதமுள்ள 40 சென்ட் இடத்தைப் பொறுத்து பொன்னுச்சாமி கவுண்டர் யாருக்கும் எந்தவொரு ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. நான் இந்த வழக்கில் 4–ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி வீதம் 1.50 ஏக்கர் சொத்தை பொன்னுச்சாமி கவுண்டரிடம் இருந்து கிரையம் பெற்ற அப்புசாமி வா.சா.2 சாட்சியாக இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் நான் அவரை பார்க்கவில்லை. வா.சா.2 அப்புசாமி தனது வாய்மொழி சாட்சியத்திலேயே பொன்னுச்சாமி கவுண்டரிடம் இருந்து 1.50 ஏக்கர் சொத்தை மட்டும் தான் கிரையம் பெற்று அனுபவித்து வந்ததாக ஒத்துக்கொண்டு சாட்சியமளித்துள்ள நிலையில் அந்த அப்புசாமி 1.90 ஏக்கர் பூமி முழுவதையும் அனுபவித்து வந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த நிலையில், நான் 1.90 ஏக்கர் சொத்தை முழுவதையும் சேர்த்து அப்புசாமியிடமிருந்து வா.சா.ஆ.8 கிரைய ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்திக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8–ல் கிரைய ஆவணத்தில் அப்புசாமி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை குறிப்பிட்டு சொல்லாமல் அவருக்கு பிதுராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. அந்த 1.90 ஏக்கர் முழுவதையும் அப்புசாமி 1982–ம் ஆண்டிலிருந்து அனுபவித்து வந்தார் என்பதற்கான வருவாய் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பெயரில் உள்ள சிட்டா, பட்டா, அடங்கல் கணக்கு போன்ற வருவாய்

ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்தை பொறுத்தும், மற்ற சொத்துக்களை பொறுத்தும் நானும், நடராஜன், ராமசாமி, விநாயக மூர்த்தி மனைவி சாந்தாமணி ஆகியோர் சேர்ந்து 18.04.2005–ம் தேதியில் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். அதில் சர்வே எண்.33/11–ல் உள்ள சொத்து நடராஜனுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது. அந்த பாகப்பத்திரத்திற்கு முன்புவரை தாவா சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் இருந்தது என்று எனக்கு தெரியாது.

3. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் இந்த வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்றும், அதனால் அந்த ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அதனால், அப்புசாமிக்கு 1.50 ஏக்கர் மட்டும் தான் பாத்தியம் என்றும், மீதமுள்ள 40 சென்ட் பூமி வாதியின் தாத்தா பொன்னுச்சாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த பொன்னுச்சாமி கவுண்டர் 13.02.2007–ம் தேதியில் மணியப்பன், முருகேஸ்வரி மற்றும் அவரது மனைவி காளியம்மாள் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். அந்த காளியம்மாள் கடந்த 16.09.2016–ம் தேதியில் இறந்து போய் விட்டார் என்றால் சரிதான். அதற்கு பின்பு மேற்படி மணியப்பனுக்கு அவரது சகோதரி முருகேஸ்வரி அவருடைய பங்கு பாகத்தை பொறுத்து வா.சா.ஆ.4 விடுதலை ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அதனால், தாவா சொத்தை வாதியின் தகப்பனார் மணியப்பன் தான் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த மணியப்பன் அவரது மகனான வாதிக்கு தாவா சொத்தை பொறுத்து 19.07.2019–ம் தேதியிட்ட

தானசெட்டில்மெண்ட் வா.சா.ஆ.5–ஐ எழுதி கொடுத்து பாத்தியப்படுத்தி விட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அதற்கு பின்னிட்டு வாதி அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை செய்யக்கோரி எங்களை அணுகி கேட்டார் என்றால் இல்லை. ஆனால், நாங்கள் எங்களுடைய பெயரை வருவாய் ஆவணங்களில் சேர்ப்பதில் நடவடிக்கை எடுத்தோம் என்று சொன்னால் இல்லை.

4. இவ்வழக்கு மத்தியில் தாவா சொத்தில் உள்ளே நுழைந்து ஜேசிபி வாகனத்தை கொண்டு மண்ணை நிரவி பிரச்சனை செய்ததால் வாதி ஊத்துக்குளி காவல் நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுத்திருந்தார் என்றால் புகார் கொடுத்தது உண்மை. நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டுவிட்டது. தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அதனால், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.01.19 14:27:26 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**